18.08.2025

OS No: 540/2019

வா.சா. 4 திரு. நாகராஜன் த/பெ பொன்னுச்சாமி

**1, 2 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

எனக்கு சொந்த ஊர் மறவமங்களம். வாதிகள் தாவா சொத்தை காளிமுத்து என்பவரிடம் கிரையம் வாங்கியதாக சொல்வது குறித்து மேற்படி கிரையம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். தாவா சொத்துக்கள் மனைப்பிரிவுகளாக பிரிக்கப்பட்டதாக சொல்வது எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் தெரியாது. தாவா சொத்துக்கள் எத்தனை மனை பிரிவுகளாக பிரிக்கப்பட்டது என்றால் 35 மனைபிரிவுகளாக பிரிக்கப்பட்டதாக என்னிடம் சொன்னார்கள். 1ம் பிரதிவாதியை எனக்கு தெரியுமா என்றால் தெரியும். 2, 3 பிரதிவாதிகளை எனக்கு தெரியாது. 2, 3 பிரதிவாதிகள் தாவா சொத்துக்களை 1ம் பிரதிவாதிக்கு கிரையம் செய்து கொடுத்த விவரத்தை கேள்விப்பட்டுள்ளேனா என்றால் கேள்விப்பட்டுள்ளேன். வாதிகளை எனக்கு தெரியுமா என்றால் தெரியும். வாதிகள் அனைவருக்கும் வாரிசுதரார்கள் உள்ளார்கள் என்றால் சரிதான். 1ம் வாதிக்கு எத்தனை வாரிசு என்றால் 4 பேர் வாரிகள் அதில் ஒருவர் பெண். 1ம் வாதி முத்துராமலிங்கம் சொல்லி சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான். எனது நிரூபண வாக்குமூல சங்கதிகள் 1ம் வாதி சொல்லி தட்டச்சு செய்யப்பட்டது என்றால் சரிதான். 2, 3 பிரதிவாதிகள் வசம் தாவா சொத்தின் அனுபவம் உள்ளது என்றால் 1ம் வாதி முத்துராமலிங்கம் தாவா சொத்தை புலங்கி வருவது எனக்கு தெரியும். 8ம் வாதி ஷாஜகான் ஒரு பத்திர எழுத்தர் என்றால் சரிதான். 8ம் வாதி பத்திர எழுத்தருடன் மற்ற வாதிகள் சேர்ந்து மோசடியாக பத்திரம் ஏற்படுத்தி கொண்டார்கள் என்றால் சரியல்ல.

R Pandy

Digitally signed by R Pandy
Date: 2025.08.18 17:54:29 +0530